# இயல் 5
# வினா விடை வகைகள்

1. இங்கு நகரப் பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்டது _______ வினா. 'அதோ அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ______ விடை.
   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
   இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

## பலவுள் தெரிக

1. தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது
   அ) அறிவினா ஆ) அறியாவினா
   இ) ஐயவினா ஈ) ஏவல் வினா
2. பிறருக்குப் பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது
   அ) ஏவல் வினா ஆ) கொளல் வினா
   இ) ஐய வினா ஈ) கொடை வினா
3. மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை
   அ) மறைவிடை ஆ) இனமொழிவிடை
   இ) நேர்விடை ஈ) ஏவல்விடை
4. வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறுவது
   அ) உறுவது கூறல் விடை ஆ) உற்றது உறைத்தல் விடை
   இ) இனமொழி விடை ஈ) வினா எதிர் வினாதல் விடை
5. உடன்பட்டுக் கூறும் விடை
   அ) சுட்டுவிடை ஆ) மறைவிடை இ) நேர்விடை ஈ) ஏவல்விடை
6. வினாவிற்கு வினாவை திரும்பக் கேட்பது
   அ) ஏவல் விடை ஆ) வினா எதிர்வினாதல் விடை
   இ) மறைவிடை ஈ) நேர்வினா
7. மறுத்துக் கூறும் விடை
   அ) சுட்டு விடை ஆ) மறைவிடை இ) ஏவல்விடை ஈ) நேர் விடை
8. ஆடத்தெரியுமா என்ற வினாவிற்குப் பாடத்தெரியும் என்று கூறுவது
   அ) வினாஎதிர் வினாதல் ஆ) உற்றது உரைத்தல்
   இ) உறுவது கூறல் ஈ) இனமொழி விடை

வருவாயா? என்ற வினாவிற்கு வராமல் இருப்பேனா? என்று கூறுவது என்ன விடை?

அ) வினாஎதிர் வினாதல் விடை ஆ)உற்றது உரைத்தல் விடை

இ) உறுவது கூறல் விடை ஈ)இனமொழி விடை

10. ஆசிரியர் மாணவனிடம் இப்பாடலின் பொருள் யாது?

அ) அறிவினா ஆ) ஐயவினா

இ) அறியாவினா ஈ) கொளல்வினா

11. மாணவன் ஆசிரியரிடம் இப்பாடலின் பொருள் யாது என வினவுவது

அ) அறிவினா ஆ) அறியாவினா இ) ஐயவினா ஈ) ஏவல்வினா

12. இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?

அ) அறிவினா ஆ) அறியாவினா

இ) ஐயவினா ஈ) ஏவல்வினா

13. ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கபடுவது

அ) அறிவினா ஆ) அறியாவினா இ) ஐயவினா ஈ) ஏவல்வினா

14. வினா ________ வகைப்படும்.

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

15. 'என்னிடம் பாரதிதாசன் கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா'? என்று கொடுப்பதற்காக வினவுவது

அ) கொளல் வினா ஆ) ஐயவினா

இ) கொடை வினா ஈ) ஏவல் வினா

16. ''வீட்டில் தக்காளி இல்லை, நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம்பியிடம் வினவி வேலையைச் சொல்வது

அ) ஐயவினா ஆ) அறியாவினா இ) கொளல் வினா ஈ) ஏவல் வினா

17. விடை ________ வகைப்படும்.

அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது

18. வெளிப்படை விடைகளில் பொருந்தாததைக் கண்டறிக.

அ) சுட்டு விடை ஆ) மறை விடை இ) நேர் விடை ஈ) ஏவல் விடை

19. நேரடி விடைகளாக இருக்கும் வெளிப்படை விடைகள் எத்தனை?

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

20. குறிப்பு விடைகளாக இருக்கும் குறிப்பு விடைகள் எத்தனை?

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு

21. பொருத்திக் காட்டுக.

i) 'கடைத் தெரு எங்குள்ளது' என்ற வினாவிற்கு 'வலப்பக்கத்தில் உள்ளது' எனக் கூறல். - ஏவல் விடை

ii) 'மணி கடைக்கு போவாயா? என்ற கேள்விக்கு 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல். - நேர் விடை

iii) 'மணி கடைக்கு போவாயா? என்ற கேள்விக்குப் 'போவேன்' என்று உடன்பட்டுக் கூறல். - மறை விடை

iv) 'இது செய்வாயா? என்று வினவியபோது, "நீயே செய்" என்று ஏவிக் கூறுவது. - சுட்டு விடை

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 4, 1 இ) 4, 1, 3, 2 ஈ) 2, 3, 1, 4

22. பொருத்திக் காட்டுக.

i) 'என்னுடன் ஊருக்கு வருவாயா?'' என்ற வினாவிற்கு 'வராமல் இருப்பேனா?' என்று கூறுவது. -

ii) 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்கு 'கால் வலிக்கிறது' என்ற உற்றதை உரைப்பது -

iii) 'நீ விளையாடவில்லையா?' என்ற வினாவிற்குக் 'கால் வலிக்கும்' என்று உறுவதை உரைப்பது. - ல்

iv) 'உனக்குக் கதை எழுதத் தெரியுமா?' என்ற வினாவிற்கு "கட்டுரை எழுதத் தெரியும்'' என்று கூறுவது. -

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 4, 1, 3, 2 ஈ) 3, 2, 4, 1

23. குறிப்பு விடைகளில் பொருந்தாததைக் கண்டறிக.

அ) நேர் விடை ஆ) ஏவல் விடை இ) கூறுவது கூறல் ஈ) இனமொழி

24. செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்கு ________ என்று பெயர்.

அ) பொருள்கோள் ஆ) வழாநிலை இ) அணி ஈ) வழுவமைதி

25. பொருள்கோள் ________ வகைப்படும்.

அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9

26. பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ________ ஆகும்.

அ) ஆற்று நீர்ப் பொருள்கோள் ஆ) நிரல் நிறைப் பொருள்கோள்
இ) கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

27. ஒரு செய்யுளில் சொற்கள் முறையே பிறழாமல் நிரல் நிறையாக அமைந்து வருவது

அ) நிரல் நிறைப் பொருள்கோள் ஆ) விற்பூட்டுப் பொருள்கோள்
இ) ஆற்று நீர்ப் பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

28. நிரல் நிறைப் பொருள்கோள் ________ வகைப்படும்.

அ) இரு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

29. செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் ________ ஆகும்.

அ) விற்பூட்டுப் பொருள்கோள் ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்
இ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

30. செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் ________ ஆகும்.

அ) விற்பூட்டுப் பொருள்கோள் ஆ) முறை நிரல் நிறைப் பொருள்கோள்
இ) எதிர் நிரல் நிறைப் பொருள்கோள் ஈ) மொழிமாற்றுப் பொருள்கோள்

31. ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக் கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது ________ ஆகும்.

அ) கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆ) ஆற்று நீர்ப் பொருள்கோள்
இ) மொழிமாற்றுப் பொருள்கோள் ஈ) நிரல் நிறைப் பொருள்கோள்

32. பொருத்திக் காட்டுக.

i) சொல்லரும் சூல்பசும் பாம்பின் - கொண்டு கூட்டுப் பொருள்கோள்

ii) அன்பும் அறனும் உடைத்தாயின் - எதிர் நிரல் நிறைப் பொருள்கோள்

iii) விலங்கொடு மக்கள் அனையர் - முறை நிரல் நிறைப் பொருள்கோள்

iv) ஆலத்து மேல குவளை - ஆற்றுநீர்ப் பொருள் கோள்

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 3, 1, 2, 4 ஈ) 1, 2, 3, 4